# 5.2 தீமையை மேற்கொள்ளுதல்

**வேத வசனம்:** ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும், ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். வெளி. 3:5

**சத்தியம்:** தேவன் பரிசுத்தமானவர். நாமும் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். பரிசுத்தமில்லாத காரியங்கள் ஒன்றும் தேவனுடைய பரிசுத்த நரகத்திற்குள்ளே பிரவேசிக்க முடியாது.

**அறிக்கை:** எனக்குள் தேவனிடமிருந்து பிறக்கிற எதுவும் தீமையை மேற்கொள்ளுகிறது

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- எதிர்மறை எண்ணங்கள் ஒரு மனிதனில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தும்?
- தீய எண்ணங்களை ஜெயிப்பது எப்படி? (யாக். 4:7)
- இறுதியில் தேவனுக்கு முன் நிற்பவர்கள் யார்? (வெளி. 3:5)

## பாடக்குறிப்புகள்

- **நமது மனம் ஒரு குருவிக்கூடு போன்றது**
  - *பிலி. 4:8, லேவி. 19:2*
- **தீய எண்ணங்கள், வேட்டையாடும் பறவைகளைப்போலிருக்கின்றன**
  - *ஆதி.15:10,11, யாக்.4:7*
- **விசுவாசம் நம்பிக்கை அன்பு இவைகளைக் காத்துக்கொள்ள** - *1 கொரி. 13:13*
- **சிலுவையின் ஜெயிக்கும் வல்லமை**
  - *ரோ. 6:6, வெளி. 3:5*

## அவருடைய மகிமையின் நினைவுகூறுதல்கள்

மனித மூளை ஒரு பறவை கூட்டைப்போன்றது. பறவை தன் கூண்டைப் பொக்கிஷத்தைப் போலப் பாதுகாக்கிறது. அது போல நாமும் நம் எண்ணங்களை நேர்மறையாக இருக்கும்படி பாதுகாக்க வேண்டும். நேர்மறையான எண்ணங்களே வாழ்வில் வளருவதற்கு உதவுகிறது. அதே சமயம் தீய எண்ணங்கள் வேட்டையாடும் பறவை போன்றது. ஒரு மனிதனுடைய தலையின் மேல் பறக்கும் பறவை அவனை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அவன் பறவை தன் தலையின் அமராதபடி பார்த்துக்கொள்ள முடியும். அதுபோல நாமும் விரும்பப்படாத அசுத்தமான எண்ணங்களை தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டு வெறுத்துத் தள்ள முடியும். அருகில் உள்ள கண்ணாடியில் தேவனுடைய வார்த்தைகளை நிறைவில் வைத்க உதவும் காரியங்களையும் இயேசு தீமைகளின் மீது சம்பாதித்த வெற்றியையும் எழுதவோ அல்லது வரையவோ செய்.

**வேதப்பகுதி**

*ஆதியாகமம் 15:10-11*

**சிந்திக்க:**

உன்னுடைய நோக்கம் தேவன் மீதும் அவருடைய வார்த்தைகள் மீதும் வைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த நீ என்ன செய்ய முடியும்?

______________________________

______________________________

**ஜெபம்:**

உன் இருதயத்தையும் சிந்தையையும் தீய எண்ணங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள தேவனுடைய உதவியை நாடி ஒரு ஜெபத்தை எழுது.

______________________________

______________________________

**செயல்**

உன் இருதயத்தைப் பாதுகாக்க எப்போதும் தேவனை நோக்கிக்கொண்டிருப்பதைத்தவிர வேறு சிறந்த வழிகள் இல்லை. ஜெபிக்கவும் உடனடியாகத் துதிக்கவும் தாமதமின்றி இருக்கும்படி பயிற்சி எடு.